**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்,**
**பதிவு அலுவலகம்: 57, V.E. ரோடு, தூத்துக்குடி**
**போடிநாயக்கனூர் கிளை**
**எண்.22, பொண்ணம்பலம் தெரு, போடிநாயக்கனூர் -- 630 561**
**CIN No: L65110TN1921PLC001908**

**பதிவுத் தபால் ஒப்புகையுடன்**

தேதி : 22.05.2026

1. **திரு.V.கணபதி த/பெ திரு.P.வடமலை முத்து**
   **கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரரான இறந்த திரு.P.வடமலை முத்துவின் வாரிசுதாரர்**
   எண்.15-2-10A, பெருமாள் கோவில் தெரு, B.மீனாட்சிபுரம், போடிநாயக்கனூர் - 625582

2. **திருமதி.V.கனகலட்சுமி க/பெ திரு P.வடமலை முத்து**
   **ஜாமீன்தாரரான இறந்த திரு.P.வடமலை முத்துவின் வாரிசுதாரர்**
   எண்.15-2-10A, பெருமாள் கோவில் தெரு, B.மீனாட்சிபுரம், போடிநாயக்கனூர் - 625582

3. **திரு.V. குமரேசன் த/பெ திரு.P.வடமலை முத்து**
   **ஜாமீன்தாரரான இறந்த திரு.P.வடமலை முத்துவின் வாரிசுதாரர்**
   எண்.15-2-10/15C, பெருமாள் கோவில் தெரு, B.மீனாட்சிபுரம், போடிநாயக்கனூர் - 625582

## ஏல விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிசொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 8(6) & 9(1)-ன் கீழ் வங்கியிடம் அடமானத்தில் உள்ள அசையா சொத்தின் விற்பனை:

இதனால் பொதுமக்கள் மற்றும் **கடன்தாரர் திரு.V.கணபதி த/பெ திரு.P.வடமலை முத்து (கடன்தாரர் / அடமானதாரர் / P.வடமலை முத்துவின் வாரிசுதாரர்) மற்றும் ஜாமின்தாரர் Late.திரு.P.வடமலை முத்துவின் வாரிசுதாரர்கள், திருமதி.V.கனகலட்சுமி (மனைவி) மற்றும் திரு.V.குமரேசன் (மகன்)** அவர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் **போடிநாயக்கனூர்** கிளையில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்து மேற்படி வங்கியின் மதுரை மண்டலத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டு "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ள நிலையில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் எங்களது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, **போடிநாயக்கனூர்** கிளைக்கு வரவேண்டிய பாக்கித்தொகை **30.04.2026** தேதிப்படி Term Loan கடன் பாக்கித்தொகை **ரூ.6,73,981.12 (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து எண்ணூற்றி ஒன்று மற்றும் பைசா பண்ணிரண்டு மட்டும்)** மற்றும் பின்வரும் வட்டி மற்றும் செலவு தொகையை சேர்த்து வசூல் செய்வதற்காக **03.07.2026** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஏல நிர்ணயத்தொகை **ரூ.52,50,000/- (ரூபாய் ஐம்பத்தி இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.5,25,000/-.**

## ஏலவிபரம்

மேலே சொல்லப்பட்டுள்ள நபர் **30.04.2026** தேதிப்படி Term Loan கடன் பாக்கித்தொகை **ரூ.6,73,981.12 (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து எண்ணூற்றி ஒன்று மற்றும் பைசா பண்ணிரண்டு மட்டும்)** மற்றும் பின்வரும் வட்டி, செலவுத் தொகைக்காகவும் சேர்த்து கீழே குறிப்பிட்டுள்ள சொத்து **03.07.2026** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | |
|---|---|
| **ஏலம் நடைபெறும் இடம்:** | **தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், போடிநாயக்கனூர் கிளை,<br>எண்.22, பொண்ணம்பலம் தெரு, போடிநாயக்கனூர் -- 630 561<br>தொலைபேசி: 04546 -- 283788<br>செல்: 98421 78900 & 98421 45637** |
| **ஏலம் நடைபெறும் தேதியும், நேரமும்:** | **03.07.2026 @ பிற்பகல் 04.00 மணி (வெள்ளிக்கிழமை)** |
| **ஏல நிர்ணயத்தொகை** | **ரூ.52,50,000/- (ரூபாய் ஐம்பத்தி இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** |

## அசையா சொத்தின் விபரம்

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரார் தாலுகா, பெரியகுளம் பதிவு மாவட்டம், போடிநாயக்கனூரர் சார்பதிவகம், போடிநாயக்கனூர் கிராமம், பழைய பட்டா நம்பர் 2992க்கு புதிய பட்டா நம்பர் 3663க்கு, வார்டு நம்பர் 3-B3, சர்வே 1679/6 நம்பரில் உள்ள ஹெக்டேர் 0.32.5க்கு செண்ட் 80 ஐ மனையிடங்களாக பிரிக்கப்பட்டுள்ளதில் 2400 சதுரடி கொண்ட 42ம் நம்பர் பிளாட் மனையிடத்திற்கு நான்குமால்:

**நான்குமால்**
வடக்கு: பிளாட் 39 நம்பர் மனையிடம்
தெற்கு : பெட்ரோல் பங்கு மற்றும் வயல்
கிழக்கு : பிளாட் 41,43 நம்பர் மனையிடங்கள்
மேற்கு : 20 அடி அகலமுள்ள தென்வடல் ரோடு

இம்மாலில் கிழமேல் அடி 60 (இருபுறமும்), தென்வடல் கீழ்புரம் அடி 43, மேல்புரம் அடி 37க்கு மொத்த சதுரடி 2400 உள்ள இடமும், மேற்படி இடத்தில் க.எண்.412/E கொண்ட கட்டிடமும் மற்றும் அதற்கு பாத்தியப்பட்ட மேற்குப் பார்த்த வழிநடை பாதை பாத்தியமும் சேர்ந்து
**மேற்கூறிய சொத்து திரு.V.கணபதி, த/பெ. திரு.P.வடமலை முத்து பெயரில் உள்ளது.**

குறிப்பு :

1. மேற்கூறிய சொத்து M/s.Sri Maruthi Polymers, **உரிமை: திரு.V.கணபதி** அவர்கள் பெற்ற கடனுக்காகவும் (CC - ரூ.52.00 லட்சம், தற்போதைய நிலுவைத் தொகை ரூ.94,32,426.51 and TL - ரூ.8.08 லட்சம், தற்போதைய நிலுவைத் தொகை ரூ.13,09,261.73) பொதுப் பிணையமாக வைக்கப்பட்டுள்ளது.
2. திரு.P.வடமலை முத்து, ஜாமீன்தாரர் காலமானதால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு தகவல்களுக்காக இந்த ஏல அறிக்கை அனுப்பப்படுகிறது

**நிபந்தனைகள்:**

1. ஏலம் கேட்பவர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் 10% தொகையை வைப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், பெயருக்கு **போடிநாயக்கனூர்** கிளையில் செலுத்தக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலமாக **03.07.2026** அன்று **பிற்பகல் 03.30** மணிக்கு முன்பதாக செலுத்த வேண்டும்.

2. மேற்படி சொத்தை காலை ஏலம் நடைபெறுவதற்கு முன்னர் காலை 10 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரையிலும் கிளை மேலாளர், தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் லிமிடெட், **போடிநாயக்கனூர்** கிளை (தொலைபேசி: **04546 -- 283 788** ; செல்: **98421 78900 & 98421 45637**) அவர்களுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவித்து நேரம் ஒதுக்கி பார்வையிட்டு கொள்ளலாம்.

3. ஏலம் எடுத்த நபர்கள் ஏலம் எடுத்தவுடன் ஏல தொகையில் 25% தொகையை (EMD சேர்த்து) உடனடியாக அல்லது மறு நாள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் வைப்பீட்டு தொகை திரும்ப தரப்பட பாட்டாது மற்றும் வைப்பீட்டு தொகை முழுவதுமாக இழக்க நேரிடும் மற்றும் இந்த சொத்து பொது ஏலம் மூலம் மறுவிற்பனை செய்யப்படும்.

4. ஏலத்தில் வெற்றி பெற்றவர் ஏல தொகையில் மீதம் உள்ள 75% தொகையை விற்பனை முடிந்த 15 நாட்களுக்குள் அல்லது அங்கீகாரம் பெற்ற அதிகாரி உடன் ஏற்ப்பட்ட உடன்படிக்கை அல்லது விரிவாக்கப்பட்ட கால அளவிற்குள் செலுத்த வேண்டும். ஏலத்தில் வெற்றி பெற்றவர் குறிப்பிட்ட கால அளவிற்குள் மீதமுள்ள தொகையை செலுத்த தவறினால் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதி 2002 (9) துணை விதி (5)- ன் படி வைப்பீட்டு தொகை திருப்ப தரப்படமாட்டாது. மேலும் சொத்து மறுஏலத்தில் விற்பனை செய்யப்படுவதுடன் முழு ஏல தொகை செலுத்தாத நபர் மேற்படி சொத்தில் எந்த வித கோரிக்கையையும் பெற தகுதியற்றவர் ஆகிறார்.

5. SARFAESI சட்டத்தின் கீழ் ஏலத்தில் பங்கு கொள்ள கட்டிய வைப்பீட்டிற்கு கண்டிப்பாக வட்டி தாப்படமாட்டாது.

6. அங்கீகாரம் பெற்ற அதிகாரி அறிந்தவகையில் மற்றும் தெரிந்த தகவல்களின் படி, ஏலம் விடும் சொத்தின் பெயரில் எந்த வில்லங்கமும் இல்லை. விற்பனைக்காக உள்ள சொத்தின் மீது ஏதேனும் கட்டணங்கள், பாத்தியதைகள், வில்லங்கங்கள், சொத்து வரி அல்லது அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் இருந்தால் அதற்கு அங்கீகாரம் பெற்ற அதிகாரி பொறுப்பேர்க்கமாட்டார்.

7. ஏலம் எடுக்கும் நபர் சட்டத்தின் படி பொருந்தக்கூடிய பதிவுக்கட்டணம், முத்திரை கட்டணம் போன்ற செலவுகளை அவரே ஏற்று கொள்ள வேண்டியது.

8. அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு எந்த காரணமும் கூறாமல் ஏலத்தை ஏற்று கொள்ளவோ/ நிராகரிக்கவோ/ மாற்றி வைக்கவோ அல்லது ரத்து செய்ய முழு அதிகாரம் உண்டு. விருப்பமுள்ள விலைப்புள்ளிதாரரின் ஏலப்படிவம் ஒழுங்காக இல்லாவிடில் அதை நிராகரிக்க அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு உரிமை உண்டு.

9. ஏலம் விற்பனைக்கான சொத்துக்கள் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. மேற்படி சொத்துக்கள் "உள்ளது. உள்ளபடி நிலையில்" விடப்படும்.

10. ஏலம் கேட்பவர்கள் தங்களது ஒரிஜினல் அடையாள அட்டையான அதவாது ஆதார் அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், ரேஷன் கார்டு, வாக்காளர் அட்டை மற்றும் பான் கார்டு (Pan card) ஏதாவது ஒன்றை ஏலத்தில்l கலந்து கொள்ளும்போது கொண்டு வர வேண்டும்.

11. விற்பனை சான்றிதழ் ஏலம் எடுத்தவர் பெயரில் மட்டுமே பதிவு செய்து கொடுக்கப்படும் வேறு நபர்கள் பெயரில் கண்டிப்பாக கொடுக்கப்பட மாட்டாது. விற்பனை பத்திரத்தை பதிவு செய்ய பத்திர கட்டணம், முத்திரை கட்டணம் மற்றும் அதற்கு தொடர்புடைய பிற அரசாங்க கட்டணங்கள், வரி முதலியவற்றை ஏலம் எடுத்த நபரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

12. ஏலத்தில் வெற்றி பெற்றவர் / கொள்முதல்தாரர் அவர்களுக்கு வருமானவரி சட்டம் 1961, பிரிவு 194 1A-ன் படி விற்பனை விலையில் 1% TDS கழித்து செலுத்த வேண்டும் மற்றும் அதனை செலுத்தியதற்கான படிவம் 26 QB உடன் ரசீது மற்றும் TDS அசல் சான்றிதழை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். (50.00 லட்சத்திற்கு மேல் உள்ள சொத்திற்கு)

13. மேலும் இந்த விற்பனை அறிவிப்பு www.tmb.bank.in என்ற இணையதளத்தில் பதிவேற்றும் / பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இடம் : மதுரை
தேதி : 22.05.2026

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட் ,**
**மண்டல அலுவலகம், மதுரை.**
**[போடிநாயக்கனூர் கிளைக்காக]**